[1986 மே 8

மேல்நிலைப் பள்ளிகளில் புவியமைப்பியல்.

708—(*வினா எண். 5057) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் புவியமைப்பியல் (ஜியாலஜி) பாட திட்டத்தை கொண்டுவரும் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டின் வரலாறு.

709—(*வினா எண். 6267) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்க காலத்திற்கு முதற்கொண்டு இன்று வரையிலான தமிழ்நாட்டின் வரலாற்றை தொகுக்க ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டின் வரலாற்றை ஆறு தொகுதிகளாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் முதல் இரண்டு தொகுதிகள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. அவை:

(1) தொல்பழங்காலம்.

(2) சங்க காலம் வாழ்வியல் மற்றும் அரசியல்.

எஞ்சிய தொகுதிகளை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றை ஆராய்ந்த நேரத்தில் தமிழ் உணர்வு குறைவாக இருந்த காரணத்தினால், தமிழக வரலாற்றை மறைக்க வேண்டுமென்று ஒரு சில கூட்டங்கள் முயற்சி செய்த நேரத்தில், சில ஆதாரங்கள் மறைக்கப்பட்டதாக சில வல்லுநர்

கள் பேசிவருவதாக அறிகிறேன். அப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிடப்படுகின்ற புத்தகங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால், அரசின் கவனத்திற்கு அல்லது துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால், அவை ஆராயப்பட்டு, குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இரண்டாவது உதகத் தமிழ் மகாநாட்டை தமிழ் நாட்டின் தலைநகரில் நடத்தியபோது, இதுபோல் முறையாக ஆராய்ந்து தமிழ்நாடு வரலாற்றைத் தொகுக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டதாக எனக்கு நினைவு. அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், இரண்டு தொகுப்புகள் வெளியிட்டிருப்பதாகவும், ஒன்று தொல்பழங்காலம் என்றும், அதையடுத்து இன்னொன்றையும் வெளியிட்டிருப்பதாகவும், இன்னும் 4 தொகுப்புகள் வெளியிட இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இது தமிழ் நாட்டுக்கு மிக முக்கியமான ஒரு காரியம். எனவே அமைச்சர் அவர்கள் இந்த நல்லுநர் குழுவை வற்புறுத்தி, விரைவில் உலகம் முழுவதும் தமிழ்நாட்டு வரலாற்றைத் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த தொகுப்புகள் முழுவதையும் வெளியிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா? எந்த கால வரையறைக்குள் இந்தத் தொகுப்புகள் வெளியிடப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒன்று தொல்பழங்காலம், மற்றொன்று சங்க காலம் வாழ்வியல் மற்றும் அரசியல். இந்த இரண்டு தொகுதிகளும் 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. மூன்றாம் தொகுதி பல்லவர், பாண்டியர் காலத்தின் கட்டுரைகள் எழுதப்பட்டு,

அச்சிடுவதற்கு அனுப்பும் நிலையில் உள்ளன. அடுத்து, சோழர் காலத்தைப் பற்றிய தொகுதி நான்காம் தொகுதியாக வெளியிட வரலாற்று அறிஞர்களால் கட்டுரைகள் எழுதப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. இப்படி ஒவ்வொரு தொகுதியும் எழுதி முடிந்தவுடன் அச்சிடப்பட்டு வெளியிடப்படும்.

மயிலாடுதுறை அரசு மருத்துவமனை.

710—(*வினா எண். 3637) திரு. மு. தங்கமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவுக்கு தனிக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட செயற் குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். மயிலாடுதுறை மருத்துவமனையானது ஒரு டிவிஷன் மருத்துவ மனை. அங்கே நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான வெளி நோயாளிகள் வந்து செல்கிறார்கள். அப்படி வருகின்ற வெளி நோயாளிகளுக்கு உடல் பரிசோதனை செய்து நல்ல முறையில் சிகிச்சை அளிப்பதற்கு வெளி நோயாளிகள் பிரிவிற்கான கட்டடத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இந்த ஆண்டிலாவது அப்படிப்பட்ட ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் புற நோயாளிகள் சராசரியாக ஒரு நாளைக்கு 1,850 பேர்கள் வருகிறார்கள் உள் நோயாளிகளைப் பொறுத்த வரையில் 215 ஆக இருக்கிறது. ஆக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தின் அடிப்படையில், இதை மீண்டும் பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.